# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு---2024

12 - ஆம் வகுப்பு பொதுத் தமிழ்

நேரம்:1.30 மதிப்பெண்:45

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 7X1=7

1. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

2. எளியது, அரியது என்பன....

அ) தீயினத்தின் துணை — நல்லினத்தின் துணை ஆ) சொல்வது — சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது—பகைவர் தொடர்பு

ஈ) மெய்ப்பொருள் காண்பது — உருவு கண்டு எள்ளாதது

3. வாய்க்கால் மீன்கள் என்னும் கவிதை நூலை எழுதியவர்-------

அ) டி.கே.துரைசாமி ஆ) வெ. இறையன்பு இ) தமிழ்நதி ஈ) பிசிராந்தையார்

4. காய்நெல் --- இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) பெயரெச்சம் இ) பண்புத்தொகை

ஈ) ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்

5. பண்புக் குறியீடுகளைக் கதை மாந்தர்களோடு பொருத்துக.

அ) அறம் --- (1)கர்ணன்

ஆ) வலிமை --- (2)மனுநீதிச் சோழன்

இ) நீதி --- (3)பீமன்

ஈ) வள்ளல் --- (4)தருமன்

அ) 3214 ஆ) 4321 இ) 2431 ஈ) 4312

6. யானை புக்க புலம்போல---இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்...

அ) தனக்குப் பயன்படும், பிறர்க்குப் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படாது, பிறர்க்கும் பயன்படாது

இ) பிறர்க்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்கும் பயன்படும், பிறர்க்கும் பயன்படும்

7. ஐம்பெருங் காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்---

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

TTK-12-TAM-1

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

II எவையேனும்ஐந்து வினாக்களுக்கு மட்டும்இரண்டு அல்லது மூன்று வரிகளில்விடைதருக.
5X2=10

8. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

9. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

10. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

11. தொன்மம்—விளக்கம் தருக.

12. காப்பியம் எத்தனை வகைப்படும் அவை யாவை?

13. உழை—உளை: பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

14. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.

15. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. தொழுதனர், அறிந்து

III எவையேனும் மூன்றனுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக. 3X4=12

16. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

17. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகழ்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்—இத்திருக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

18. வேளாண் மேளாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

19. எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை—இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

20. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே—உவமையும் பொருளையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

IV. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விரிவான விடை எழுதுக. 2X6=12

21. மகாநதிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

22. அறிவுடைமையின் வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

23. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

V. அடி பிறழாமல் எழுதுக : 1×4=4

24. குழல்வழி...எனத்தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுளை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com